# இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்படுத்தலுக்கான பொறுப்புக்கூறல் தொடர்பில் *OHCHR* வெளியிடும் அறிக்கையின் சுருக்கம்

*(ஆங்கிலத்தில் எழுதப்பட்ட மூல ஆவணம் தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது)*

*இந்த அறிக்கையானது ஐனாவின் பொதுச்சபை தீர்மானமான 48/141 இன் கீழ் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகருக்கு வளங்கப்பட்ட பொது ஆணைக்கு அமையவும், மனித உரிமைகள் பொதுச்சபை தீர்மானங்களான 46/1 மற்றும் 51/1,[1] ஆகியவற்றின் கீள் OHCHR இற்கு (மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் அலுவலகத்திற்கு) வளங்கப்பட்ட குறிப்பிட்ட ஆணையின் அடிப்படையிலும், இலங்கையில் இழைக்கப்பட்ட வலிந்து காணாமலாக்கப்படுதல்களுக்கு எதிரான பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளில் காணப்படும் குறைபாடுகளை ஆராய்ந்து வெளிக்கொணரும் நோக்கில் வெளியிடப்படுகின்றது. 1970 ஆம் ஆண்டுகளில் ஆரம்பித்து 2009 ஆம் ஆண்டு வரையிலான உள்நாட்டு போர் முடிவடையும் வரை, காணாமலாக்கப்படுதல் எனும் பல அலைகளினை வெவ்வேறு காலகட்டங்களில் இலங்கை எதிர்னோக்கி வருகின்றது. அடிப்படையில் இலங்கை பாதுகாப்புப் படையினராலும் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய துணை இராணுவக் குழுக்களினாலும் அவர்களின் எதிரிகளாகக் கருதப்படுபவர்களை அச்சுறுத்தி ஒடுக்குவதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தும் நோக்கில், குறைந்தது, பல்லாயிரத்திற்கிம் மேற்பட்ட நபர்கள் வலிந்து காணாமலாக்கப்படுதலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகவுள்ளது. அனைத்து படி நிலைகளிலும் குற்றவாளிகள் நீதியின் பிடியிலிருந்து தப்பித்து வருக்கிறார்கள். தண்டனையின் பிடியிலிருந்து தப்பித்து வருதலானது ஆழமாக வேரூன்றியுள்ளது. குடும்பங்கள் காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவினர்களின் கதி மற்றும் இருப்பிடம் பற்றிய தகவலெதனையும் அறியமுடியாத நிலையில் உள்ளன. கட்டமைப்புக்களின் பலவீனங்களை கையாள்வதிலும் அவசியமான சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதிலும் தோல்விகள் ஏற்பட்டுள்ளதால் காணாமல் ஆக்கப்படல் மீழவும் நிகழ்வதற்க்கான ஆபத்து உறுதியாக காணப்படுகிறது.*

*அண்மைய ஆண்டுகளில், வலிந்து காணாமலாக்கப்படுதலில் இருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையை (ICPPED) அங்கீகரித்தமை மற்றும், காணாமலாக்கப்படுதலினை ஒரு குற்றமாக அங்கீகரித்தமை, வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விசாரணை ஆணைக்குழுக்களை நிறுவியமை ஆகிய விடையங்கள் உட்பட, காணாமல் போனோர் அலுவலகம் (OMP) மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் (OR) போன்றவற்றினையும் அமைத்து இலங்கை சில சாதகமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இருப்பினும், இந்த நடவடிக்கைகள் எவையும் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளான உண்மை அறிதல், நீதி, இழப்பீடுகள் மற்றும் மீழ் நிகழாமைக்கான உத்தரவாதமளிக்கப்படல் ஆகிய விடையங்களில் குறிப்பிடும்படியான முன்னேற்றத்தை ஏற்படுத்தவில்லை. காணாமல் ஆக்கப்பட்ட நபரின் கதி மற்றும் இருப்பிடம் குறித்த தகவல் இன்னும் தெளிவுபடுத்தப்படாதவரை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை ஒரு " தொடரும் மீறலாக" கருதப்படும்.*

**வலிந்து காணாமலாக்கப்படுவதனால் பாதிக்கப்பட்டவர்கள் மீது ஏற்படும் தாக்கம்**

*பாதிக்கப்பட்டவர்களை இவ்வறிக்கையின் மையப்புள்ளியாக கருத்தில் கொண்டு, பொறுப்புக்கூறல் குறித்த அவர்களின் பார்வைகள் மற்றும் அனுபவங்கள் குறித்து அறியும் நோக்கில், OHCHR அலுவலகம் இருதரப்பு நேர்காணல்களை 39 பாதிக்கப்பட்ட தனி நபர்களுடனும் (32 பெண்கள் மற்றும் 7 ஆண்கள்) மற்றும் 43 பாதிக்கப்பட்டவர்களை உள்ளடக்கிய (34 பெண்கள் மற்றும் 9 ஆண்கள்) இலக்குக் குழுக்களுடனும் தொடர் ஆலோசனைகளை மேற்கொண்டது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர் மட்டுமன்றி, அவர்களின் உறவினர்கள் உட்பட, அதன் விளைவாக நேரடியான தாக்கத்திற்கு உட்பட்டவர்களும் அதனால் பாதிக்கப்பட்டவர்களுள் உள்ளடங்குவர். இவ் அறிக்கையில் வழங்கப்பட்ட முக்கிய கண்டுபிடிப்புகளுடன் தொடர்புடைய விடையங்கள் பின்வருமாறு:*

- *காணாமல் ஆக்கப்பட்டவரின் உறவினர்களுக்கு ஏற்படும் உளவியல் தாக்கம்:* அதிர்ச்சி, பயம், கோபம் உதவியின்மை, குற்ற உணர்வு ஆகியவை உட்பட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெளிவாக குறிப்பிடும்படியான உளவியல் தாக்கங்களை குறிப்பிட்டனர். ஒரு தசாப்தம் கடந்த பின்பும், இதற்கான ஒரு முடிவினை காண முடியவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். பலர் தமது உறவினர்கள் வீடு திரும்புவார்கள் என்ற நம்பிக்கையில் திடமாக உள்ளனர். சடலம் கிடைக்காமல் போவது மற்றும் இறுதிச் சடங்குகளை செய்யாமல் இருப்பது போன்ற நிகழ்வுகள் இலங்கையின் காலாச்சார மத நம்பிக்கையினை சார்ந்த மக்கள் மத்தியில் தாக்கத்தினை ஏற்படுத்துகிறன. குறிப்பாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் சமூக – உளவியல் சேவைகளை பெறுவதற்கான சாத்தியம் குறைவாக உள்ளது.
- *சமூக விலக்கு:* பல பாதிக்கப்பட்டவர்கள் சமூகத்தினால் தாங்கள் தனிமைப்படுத்தப் படுவதனாலும் ஒதுக்கப்படுவதனாலும் தமக்கு ஏற்படும் வேதனையானா அனுபவத்தை குறிப்பிட்டனர். "கடந்து செல்லுமாறு" அவர்களின் உறவினர்கள் கொடுக்கும் அழுத்தம் காரணமாகவோ அல்லது அவர்களின் குழந்தைகளுக்கு ஏற்படும் களங்கத்தினை தவிர்ப்பதற்காகவோ சிலர் தாமாகவே தங்களை சமூகத்தில் இருந்து தனிமைப்படுத்திக் கொள்கின்றனர். அதிகாரிகளின் மிரட்டல் மற்றும் பழிவாங்கும் நடவடிக்கைகளில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அயலவர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் தங்களிடமிருந்து விலகி இருப்பதாக மற்றையவர்கள் தெரிவித்தனர். சில சமூகங்களில்

[1] இந்தத் தீர்மானங்களின் கீழ், மனித உரிமைகள் பேரவையானது, இலங்கையில் இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்கள் ஆகியவற்றுக்குரிய பொறுப்புக்கூறல் திறனை வலுப்படுத்துமாறு OHCHR இடம் கோரியது.

*"விதவைகள்" கெட்ட சகுனங்கள் அல்லது துரதிர்ஷ்டங்களுடன் தொடர்புடையவர்கள் என கருதப்படுவதால், ஏனையவர்களின் குடும்பக் கொண்டாட்டங்களில் இருந்து தாம் விலக்கி வைக்கப்படுவதாக தெரிவித்தனர்.*

- *சமூக-பொருளாதார உரிமைகள் : ஆரோக்கியம், கல்வி மற்றும் போதுமான வாழ்க்கைத் தரம் ஆகிய உரிமைகள் பாதிக்கப்படுவதுடன் சிக்கல் நிறைந்த நிதி, சமூக மற்றும் சட்டரீதியான பாதிப்புகளும் வலிந்து காணாமலாக்கப்பட்டதனால் பாதிக்கப்பட்டவர்களின்மீது ஏற்படுத்தப்படுகின்றன. இலங்கையில் காணாமலாக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஆண்களே, ஆதலால் அந்தக் குடும்பங்களில் பெண்களே வருமானம் ஈட்ட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர், அப்படியான நிலையில் அவர்கள் பணிக்கு செல்லும் போது, பாலியல் துன்புறுத்தல் மற்றும் சுரண்டல் போன்ற அபாயங்கள் உட்பட, பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளாகின்றனர். சிறுவர்கள் தங்கள் சில உரிமைகளை அனுபவிப்பது குறைக்கப்பட்டுள்ளது- உதாரணமாக: அவர்களின் கல்வியினை பெற்றுக்கொள்ளல், ஆரோக்கயம் மற்றும் குடும்ப வாழ்க்கை, ஆகிய அனைத்தும் அவர்களின் உயிர்வாழ்விலும் வளர்ச்சியிலும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. தங்கள் உறவினரை விடுவிப்பதாக அளிக்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையில் மீட்பு தொகையினை கேட்டு தங்களை அணுகுவதன் மூலம் நிதி ரீதியாக தாங்கள் சுரண்டப்பட்டதாக சில பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.*

### *பொறுப்புக்கூறல் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களின் பார்வைகள்*

*பாதிக்கப்பட்டவர்கள், அவர்களின் தேடல்கள், நீதிக்காக பிரச்சாரம் செய்தல், மற்றும்/அல்லது ஆர்ப்பாட்டங்கள் அல்லது நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்றல் ஆகியவற்றின் பின்னணியில், துன்புறுத்தல், மிரட்டல், கண்காணிப்பு மற்றும் வன்முறை ஆகியவற்றுக்கு உள்ளாகியுள்ளதாகப் புகாரளித்தனர். சில சந்தர்ப்பங்களில், பாதிக்கப்பட்டவர்கள் தாம் பாலியல் மற்றும் பால்நிலை-சார் சித்திரவதைகள் உட்பட, சித்திரவதைகளுக்கு உட்பட்ட்தாக தெரிவித்தனர். இந்த அனுபவங்களை தம்மால் தாங்க முடியாத நிலையில், பாதிக்கப்பட்டவர்கள் இது தொடர்பான பின்வரும் மேலதிக முயற்சிகளுக்கு வலுவாக ஆதரவளித்தனர்:*

- *உண்மை: கலந்தாலோசிக்கப்பட்ட அனைத்து பாதிக்கப்பட்டவர்களும் தங்கள் அன்புக்குரியவர்களின் தற்போதைய கதி, இருப்பிடம் மற்றும் காணாமல் போன சூழ்நிலை ஆகியவை பற்றிய உண்மைகளை கண்டறிய வேண்டும் என்பதனை மிக முன்னுரிமைப்படுத்த வேண்டுமெனக் கருதுகின்றனர். காணாமலாக்கப்படல் எவ்வாறு மற்றும் எதனால் பெருமளவில் நிகழ்ந்தன, எந்தெந்த காரணிகள் அவற்றின் நோக்கங்களுக்கு உதவின என்பதைப் புரிந்துகொள்வது அவசியமாகும். இவ்வகையான உண்மை பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கானது மாத்திரமன்றி, முழு தேசத்திற்குமான "உளவியல் ஆற்றுப்படுத்தலில்" பங்களிக்கும். மனித புதைகுழிகளில் காணப்படும் மனித எச்சங்களை அடையாளம் காணுதல் மற்றும் போரின் இறுதியில் அரசாங்கத்தின் தடுப்பு காவலில் வைக்கப்பட்ட அல்லது முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நபர்களின் பெயர்ப்பட்டியலை பகிரங்கப்படுத்தல் உள்ளிட்ட முயற்சிகளுக்கு பாதிக்கப்பட்டவர்கள் ஆதரவு தெரிவித்தனர்.*

- *குற்றவியல் நீதி: முக்கியமாக உயர்மட்ட பதவிகளை வகிக்கும் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் அவர்களின் பொறுப்பிற்குரிய குற்றங்களிற்கான தண்டனையை பெற வேண்டும் என்ற வலுவான விருப்பத்தை பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். உயர்மட்ட நிலையிலிருப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது மீள் நிகழாமையுடன் தொடர்புடையதாகக் காணப்படும்: அதாவது அது அதிகாரத்தில் உள்ளவர்களை நீக்குதல் மற்றும் எதிர்கால வன்முறைகளை குறைத்தல் ஆகிய இரண்டு செயல்களினூடாகவும் ஆகும். கலந்தாலோசிக்கப்பட்ட பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர், தற்போது நீதியை வழங்க இலங்கை விரும்பவில்லை எனவும் மற்றும் அதனால் அதை வழங்க இயலவில்லை எனவும் உணர்ந்தனர். குற்றஞ் சாட்டப்பட்ட அதிகாரிகளுக்கு "மன்னிப்பு வழங்குவதல்" , பதவி உயர்வு வழங்குதல் மற்றும் குற்றவாளிகள் "ஓய்வூதியத்துடனான அமைதியான ஓய்வு" போகத்தினை அனுபவித்துக்கொண்டிருப்பது போன்ற விடயங்களினை பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் நிலைமையுடன் ஒப்பிடும் போது, அவை ஆத்திரம் ஊட்டக்கூடிய மூலகாரணங்களாக அமைகின்றன. உலகளாவிய சட்ட வரம்பிற்கு உட்பட்ட மூன்றாம் தரப்பு அரசுகளினால் வழக்குகள் முன்னெடுக்கப்படுதல் "குற்றஞ் சாட்டப்பட்ட அதிகாரிகளின் அத்தியாயம் மூடப்படுவதைத் தடுக்கின்றன", மேலும் அது பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு நம்பிக்கையினையும் அளிக்கின்றது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். இலங்கையின் நிலைமையினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்ய வேண்டுமெனவும் சில பாதிக்கப்பட்டவர்கள் சர்வதேச சமூகத்தை கோரினர்.*

- *இழப்பீடுகள் மற்றும் மீழ் நிகழாமைக்கான உத்தரவாதங்கள்: இழப்பீடாக வழங்கப்படும் எந்தக் கொடுப்பனவுகளும் பொறுப்பேற்றலினை அங்கீகரிப்பதுடனும் உண்மையினை வளங்குவதுடனும் இணைந்திருக்க வேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். வழங்கப்படும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் நீதியிலிருந்து கவனத்தை திசைதிருப்பவும் மற்றும் மக்களின் நீதிக்கான குரல்களை விலை பேசுவதற்குமான ஒரு கருவி என்னும் தங்கள் கருத்தினை பகிர்ந்து கொண்டனர். அடிப்படை தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு இசைவாக "இடைக்கால நிவாரணங்கள்" அதிகம் வரவேற்கப்பட்டன, ஆயினும், ஆலோசிக்கப்பட்ட பாதிக்கப்பட்டவர்களில் எவரும் இடைக்கால நிவாரணத் தொகை எதனையும் பெறவில்லை. பொதுவில் பாதிக்கப்பட்டவர்கள் தமது காணாமலாக்கப்பட்டுள்ள உறவினர்களின் பெயரில் ''இறப்புச் சான்றிதழ்களைப்'' பெறுவதை எதிர்த்தனர். அதற்கு பதிலீடாக வழங்கப்படும் "காணாமல் போனதற்கான சான்றிதழானது" சில காலங்களின் பின் தன்னிச்சையாக இறப்புச் சான்றிதழாக மாற்றப்படலாம் எனும் அச்சத்தினை பாதிக்கப்பட்டவர்கள் வெளிப்படுத்தினர். நிதி அல்லாத வடிவிலான இழப்பீடுகளானவை முக்கியமானதாக கருதப்பட்டது, அந்த வகையில் நினைவுகூறுதலுக்கான அங்கீகாரம் போன்ற நடவடிக்கைகள் முக்கியமானவையாக இருந்த போதும், தாங்கள் நினைவு கூறல்*

நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் தடைகளை எதிர்நோக்கியதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். மீழ் நிகழாமை நிலவுவதற்கு பாதிக்கப்பட்டவர்களால் அவசியமென கருத்துதப்படுவம் விடையங்களானவை முழுமையான உண்மை மாற்றம், அத்துடன் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு மற்றும் வலுவான சட்டப் பாதுகாப்புகள், உண்மையினை அம்பலப்படுத்துதல் மற்றும் குற்றங்களுக்கான தண்டனைகளின் பிடியிலிருந்து தப்பித்து வரும் நடைமுறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தல் ஆகியவை ஆகும்.

**இலங்கைக்குள் பொறுப்புக்கூறல் முயற்சிகள்: அதில் பாரிய பற்றாக்குறை**

***முழுமையான உண்மைக்கான தேடுதல்:*** *உண்மையை-தேடுதல் சார்ந்த பொறிமுறைகளுக்கு இலங்கை புதியதல்ல, அதற்கு சான்றாக, பாரிய அளவில் நிகழ்ந்த வலிந்து காணாமலாக்கப்படல் சார்ந்த குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் இலங்கையின் பொதுவான ஒரு யுத்தியாக விசாரணை ஆணைக்குழுக்கள் (CoI) உருவாக்கப்படுகின்றன. இந்த விசாரணைகளில் சில வலிந்து காணாமலாக்கப்படுத்தலின் வடிவ முறைகள் குறித்து குறிப்பிடத்தக்க நுண்ணிய தகவல்களை வழங்கியுள்ள போதும், தொடர் நடவடிக்கைகள் இல்லாமையால், அது பொறுப்புக்கூறலினை முன்னெடுக்க அவசியமான "கடினமான" அம்சங்களின் செயலற்ற தன்மையினை மூடி மறைக்கவே CoI கள் பயன்படுத்தப்பட்டுள்ளன எனும் கருதுகோளை உருவாக்குகின்றது. 1990 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட வலைய விசாரணை ஆணை குழுக்கள், அகில-இலங்கைக்கான விசாரணை ஆணைக் குழுக்கள், கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு (2011) மற்றும் பரணகம ஆணைக்குழு (2013) ஆகியவற்றினை சுருக்கமாக ஆய்வு செய்ததில், அவற்றின் அறிக்கைகள் பெருமளவில் திருப்தி அளிக்காதவையாகவும், சில அறிக்கைகளே வெளியிடப்பட்டும் இருப்பதுடன் அவற்றின் பரிந்துரைகளும் அமுல்படுத்தப்படாமல் போய்விட்டன. அது அவ்வாறு இருக்கையில், 2023 ஆம் ஆண்டு இலங்கையினால் முன்வைக்கப்பட்ட புதிய தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவானது பொதுச் சமூகத்திடையேயும் (civil society) மற்றும் பாதிக்கப்பட்டோரிடையேயும் சந்தேகங்களை பிறப்பித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளது போல், உண்மையைக் கண்டறியும் நம்பகமான ஒரு பொறிமுறைக்கு ஏற்ப சூழல் இன்னும் அங்கு உருவாகவில்லை. பாதிக்கப்பட்ட குழுக்களுடனும் பொதுச் சமூக அமைப்புகளுடனும் இணைந்து, இலங்கைக்கான மனித உரிமைகள் ஆணைக்குழுவானது நிலைமாறுகால நீதிக்கான விரிவான ஒரு அணுகுமுறையின் அவசியத்தினை எடுத்துரைத்துள்ளது.*

***கதி மற்றும் இருப்பிடத்தினை தெளிவுபடுத்துதல்:*** *இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்படுதலினால் பாதிக்கப்பட்ட பெரும்பாலானோர் அவர்களின் அன்புக்குரியவர்களின் கதி மற்றும் இருப்பிடம் தொடர்பான எந்தவிதமான தகவலினையும் அறியமுடியாமல் உள்ளனர்.[2] 2016 ஆம் ஆண்டு இலங்கை காணாமல் போனோருக்கான அலுவலகத்தினை (OMP) நிறுவியது. கடந்த ஏழு வருடகாலமாக, OMP, அதற்குரிய சட்டத்தின் கீழ் பரந்த அதிகாரங்களை கொண்டிருந்த போதிலும், "வழக்குகளை பராமரிக்கும் அணுகுமுறையினையே" அது பின்பற்றியுள்ளது என விபரிக்க முடிகிறது, தனிநபர்களின் கதி மற்றும் இருப்பிடத்தினை தெளிவுபடுத்துவதற்கான முழுமையான விசாரணைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, அதன் முதற்கட்ட விசாரணைகள் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நிதி உதவி பெறுவதற்கான தகுதியினை ஆய்வு செய்வதனையே மைய நோக்கமாக கொண்டிருந்தன. பாதிப்புற்ற சமூகத்திடமிருந்து வெளிப்படும் அவநம்பிக்கையினை OMP எதிர் நோக்குகின்றது. சர்வதேச தொழில்நுட்ப உதவிகளில், சிறந்தனவாகக் கருதப்படுபவை எவையெனில், அவை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கதி மற்றும் இருப்பிடத்தை தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளை நோக்கி OMP யினை மீழ்-வழிப்படுத்தவும் மற்றும் அதன் சுதந்திரத்தை வலுப்படுத்தவும், பாதிக்கப்பட்டவர்கள் செயற்படுவதற்கு பாதுகாப்பான சூழலை உறுதி செய்யவும் OMP எடுக்கக்கூடிய நடவடிக்கைகளினை ஆதரிக்கும் நோக்கில் அமைய வேண்டும் என்பதாகும்.*

**இலங்கையில் உள்ள சட்ட நடவடிக்கைகள்**

***குற்றவியல் நீதி****: வலிந்து காணாமலாக்கப்படுதல் தொடர்பான வழக்குகள் மற்றும் தண்டனைகள் ஆகியவற்றின் விகிதமானது குறைவான அளவிலேயே இருந்து வந்துள்ளது. "திருகோணமலை 11" எனும் வழக்கினதும் மற்றும் அரசியல் கேலிச்சித்திர கலைஞரும் ஊடகவியலாளருமான பிரகீத் எக்னெலிகொடவின் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பிலான வழக்கினதும் நிலைகள் குற்றவியல் விசாரணைகள் மற்றும் வழக்கு விசாரணைகளில் முன்னேற்றம் இல்லாமையினை விபரிக்கின்றன. நீதி அமைப்பில் காணப்படும் முக்கிய பலவீனங்களில் உள்ளடங்குபவை பின்வருமாறு:*

- *உள்நாட்டு சட்ட கட்டமைப்பில் காணப்படும் இடைவெளிகள்: வலிந்து காணாமலாக்கப்படுதலுக்கு எதிரான சட்டம் இலங்கையில் 2018 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட போதிலும், அது அந்த ஆண்டுக்கு முன்னைய காலங்களில் இடம்பெற்ற காணாமலாக்கப்படுதல்களுக்கும் பொருந்தக்கூடியதா என்பது தெளிவற்றுள்ளது. இலங்கையின் சட்டக் கட்டமைப்பானது வலிந்து காணாமல் ஆகப்படுதலினை மனிதகுலத்திற்கு எதிரான ஒரு குற்றமாக அடையாளம் கண்டுகொள்ளாதது மட்டுமன்றி அக்குற்றம் இளைக்கப்படுவதில் ஒருவர் தொடர்புபடும் விதம் (mode of liability) போன்ற சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முறைகளையும் கூட அது உள்ளடக்கவில்லை.*

[2] *2000 மாம் ஆண்டுகளில் WGEID இனால் "தெளிவுபடுத்தப்பட்டதாக" கருதப்பட்ட ஆயிரக்கணக்கான வழக்குகள், காணாமலாக்கப்பட்டோரின் கதி மற்றும் இருப்பிடம் தெளிவுபடுத்தப்பட வேண்டும் எனும் அதன் தற்போதைய அளவுகோல்களை பூர்த்தி செய்யுமா என்பது தெளிவாக இல்லை என்பதனை இவ் அறிக்கை குறிப்பிடுகிறது. WGEID இன் தற்போதைய செயல்முறைக்கு அமைய அதனால் மூடப்பட்ட வழக்குகளை மீண்டும் திறக்க முடியுமென அது குறிப்பிடுகிறது.*

- *வலிந்து காணாமலாக்கப்படல் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்கவோ விசாரணை செய்யவோ விரும்பாத காவல்துறையினர்:* பாதிக்கப்பட்டவர்கள் வலிந்து காணாமலாக்கப்படல் தொடர்பான முறைப்பாடுகளை காவல்துறையிடம் பதிவு செய்வதிலும்கூட குறிப்பிடத்தக்க சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். நடைமுறைத் தடைகளையும், மிரட்டல்களையும் மற்றும் துன்புறுத்தல்களையும் பலர் எதிர்கொண்டுள்ளனர். காவல்துறையினர் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான வழக்குகளினை துல்லியமாக விசாரணை செய்வார்களா என்பதில் நம்பகமற்ற தன்மை நிலவுகின்றது, மேலும் தற்போதைய காவல்துறை உயர் அதிபர் பதவிக்கான (Inspecter General of Police) (சித்திரவதை செய்ததற்கும் அதற்க்கு கட்டளையிட்டதற்கும் பொறுப்பானவர் என உச்சநீதிமன்றத்தினால் கண்டறியப்பட்ட ஒருவரின்) உத்தியோக நியமனம் போன்றவை அவர்களின் நம்பிக்கையினை மேலும் சிதைவடையச் செய்துள்ளது.

- *சட்டமா அதிபர் அலுவலகத்தின் ஆர்வ முரண்பாடுகள்:* தற்போது, அரசாங்கத்தின் தலைமைச் சட்ட ஆலோசகராகவும் அரசுக்காக வாதிடுபவராகவும் செயற்படும் அதே நபருக்கு குற்ற வழக்குகளை தொடரும் சட்ட மா அதிபராகவும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. சட்டமா அதிபர் ஒரு ஆட் கொணர்வு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள இராணுவத்தினரையோ, காவல்துறையினரையோ அல்லது பிற அரச அமைப்புகளில் உள்ள பிரதிவாதிகளையோ பிரதிநிதித்துவப்படுத்தும் அதேவேளை, அதே நபர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைககளையும் அவரே தலைமை தாங்கக்கூடிய நிலை உள்ளது.

- *நீதித்துறையின் சுதந்திரத்திற்கான பாதுகாப்பின்மை:* நீதித்துறையின் சுதந்திரத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் கட்டமைப்பு பலவீனங்கள் பற்றிய கவலைகள் தொடர்ந்தும் எழுந்து வருகின்றன, அத்துடன் மோதல்கள் தொடர்பான வழக்குகள் மிகவும் அரசியல் மயமாக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அதனை தீர்ப்பதற்கான நீதித்துறையின் திறனை அரசியல் அழுத்தங்கள் நலிவடையச் செய்கின்றன.

- *பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்குமான பாதுகாப்பின்மை:* மனித உரிமைக் குழுவின் முடிவின்படி, அச்சுறுத்தல்கள், மிரட்டல் மற்றும் துன்புறுத்தல் ஆகியவற்றை எதிர்கொள்ளும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மற்றும் சாட்சிகளுக்கும் தற்போது போதிய பாதுகாப்புக் கட்டமைப்பு எதுவும் காணப்படவில்லை. சட்டத்தரணிகள் மிரட்டல் மற்றும் பழிவாங்கல்களை தாங்களும் எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

- *குற்றவியல் விசாரணைகளில் நிலவும் தீர்க்கமான தாமதங்கள்:* குற்றவியல் விசாரணைகள் பொதுவாக நீண்ட கால தாமதங்களை கொண்டுள்ள அதேவேளை, இது பொறுப்புக்கூறலைத் தவிர்ப்பதற்கான ஒரு யுத்தியாகவுள்ளது எனும் தீர்மானத்திற்கு பாதிக்கப்பட்டவர்களின் வழக்கறிஞர்கள் வருவதற்கு அமைவாக, வலிந்து காணாமலாக்குதல் அல்லது அரச அதிகாரிகள் சம்பந்தப்பட்ட ஏனய கடுமையான மீறல்கள் தொடர்பான வழக்குகளில் தாமதங்கள் மேலும் அதிகமாகக் காணப்படுகின்றன.

- *பொது மன்னிப்புகளை வழங்குவதன் மூலம் மனித உரிமைகளை பாதுகாக்கும் கடமையினை மீறுதல்:* வலிந்து காணாமலாக்கப்படுதல் தொடர்பில் ஒருசில வழக்குகளே காணப்படுகையில், அவ்வாறான ஒரு வழக்கில் தண்டனை அளிக்கப்பட்ட நபர் ஒருவருக்கு 2020 ஆம் ஆண்டு அப்போதைய இலங்கை ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

- *ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் (COIs) அரசியல் மயமாக்கப்பட்டதன் விளைவு:* 2020 ஆம் ஆண்டு, "அரசியல் பாதிப்புகள்" என அழைக்கப்படும் விடையத்தினை ஆய்வு செய்வதற்காக அக்கால இலங்கை ஜனாதிபதியால் ஒரு விசாரணை ஆணைக்குழு நிறுவப்பட்டது. குறிப்பாக, பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பான வழக்குகளில் குறிப்பிட்ட விசாரணைகள் மற்றும் வழக்குகள் நிறுத்தப்பட வேண்டும் மற்றும் தண்டனைகள் ரத்து செய்யப்பட வேண்டும் என கொடுக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகள் வருந்தத்தக்கவை ஆகும்.

***சிறப்பு நீதிப் பொறிமுறைக்கான அரசாங்கத்தின் முந்தைய முன்மொழிவு:*** மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசாங்கத்தின் சர்வதேச மனித உரிமைகளுக்கான சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டம் ஆகியவற்றின் மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக 2015 ஆம் ஆண்டில், ஒரு சிறப்பு ஆலோசகரைக் கொண்ட நீதித்துறை பொறிமுறையை நிறுவுவதற்கான முன்மொழிவை குறிப்பிட்டு பாராட்டியது. HRC Res 30/1 இல் (இலங்கையினால் இணையனுசரணை வழங்கப்பட்டது) மனித உரிமைகள் பேரவை (HRC) சுதந்திரமான நீதித்துறை மற்றும் சட்டத்தரணிகளுக்கான நிறுவனங்களின் அவசியத்தையும், பொதுநலவாய நாடுகள் மற்றும் பிற வெளிநாட்டு நீதிபதிகள், எதிர்த்தரப்பு சட்டத்தரணிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரச சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்கள் ஆகியோரின் பங்கேற்பின் முக்கியத்துவத்தையும் முன்னிலைப்படுத்தியது. 2020 பெப்ரவரி யில் இடம்பெற்ற அரசாங்க மாற்றத்தினைத் தொடர்ந்து, மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்திற்கான தனது ஆதரவை இலங்கை உத்தியோகபூர்வமாக மீளப் பெற்றதுடன், அடுத்தடுத்த ஆண்டுகளில் வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் அரச சட்டத்தரணிகளுடன் அத்தகைய பொறிமுறையை நிறுவுவது அதன் அரசியலமைப்பிற்கு முரணானது எனும் நிலைப்பாட்டினை தொடர்ந்தது, இருப்பினும் அந்த நோக்கானது சில சட்டத்தரணிகளாலும், கல்வி வல்லுநர்களாலும் மற்றும் CSO க்களாலும் கடுமையாக எதிர்க்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் எவ்வாறு தமக்கான தண்டனையின் பிடியிலிருந்து தப்பிக்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளனர் எனும் விடையத்தினை கையாள்வதற்கான உண்மையான மாற்றுத் திட்டம் இலங்கையால் முன்னெடுக்கப்படவில்லை.

***பொது (civil) வழக்குகள்:*** பாதிக்கப்பட்ட சிலரின் குடும்பங்கள் நீதிமன்றங்களில் ஆட்கொணர்வு மனுவிற்க்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். இந்த வழக்குகள் குறிப்பிடத்தக்க நடைமுறை தாமதங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன, மற்றும் வலிந்து காணாமலாக்கப்படுதல் தொடர்பான வழக்குகளை அவர்கள் காணாமல்

போன இடத்திலிருந்து தூர இடங்களுக்கு மாற்றப்படுவதனால் பாதிக்கப்பட்டவர்களால் அவ்விடங்களை அணுகுவதில் சிரமத்தினையும் எதிர்மறையான விளைவுகளையும் உருவாக்கியுள்ளது. இருப்பினும், தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நபர்களுக்கு காவல்துறையினரே பொறுப்பு எனும் தீர்ப்பு உட்பட நீதிமன்றம் சில வழக்குகளில் சில தீர்ப்புகளை வழங்கியுள்ளது.

***இழப்பீடுகள்***: இழப்பீடுகளை பொறுத்தவரை, விரிவான பொறுப்புக்கூறல் அணுகுமுறைகளை உறுதிப்படுத்தும் நோக்கில், பாதிக்கப்பட்டவர்களுடனும் அவர்களின் சமூகத்துடனும் போதியளவு ஈடுபாட்டினை மேற்கொள்ளும் படிமுறை தவறப்பட்டுள்ளது. இழப்பீடு தொடர்பிலான ஆலோசனைகள், அவை உள்வாங்கப்பட்டதாகவும் பால்நிலை-விளைவுகளை உள்ளடக்கியதாகவும் அமைவதுடன், குற்றத்தினை ஒப்புக்கொள்ளுதல், நினைவேந்தல், மற்றும் சட்ட ஆதரவு ஆகிய நிதி அல்லாத இழப்பீட்டு அம்சங்களினையும் கொண்ட அதன் முழுமையான கருத்தாக்கலை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டியதன் அவசியம் காணப்படுகின்றது.

***மீறல்கள் மீழ் நிகழாமை:*** பல விசாரணைகளும் அறிக்கைகளும், பாதுகாப்புப் படையினர் கடுமையான மனித உரிமை மீறல்களில் நம்பத்தகுந்த வகையில் சம்பந்தப்பட்டுள்ளனரா என முறையாக பரிசோதித்தல் (vetting), இராணுவத்தின் மீதான பொதுஜன ஆளுமையினை இறுக்குதல், கடுமையான அவசரகாலச் சட்டங்கள் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றை நீக்குதல் மற்றும் தடுப்புக்காவல் மற்றும் நீதிமன்றங்களை அணுகல் தொடர்பான சட்டப் பாதுகாப்புகளை மீண்டும் நிலைநாட்டுதல் மற்றும் அவை கடைப்பிடிக்கப்படுவதனை உறுதி செய்தல் ஆகியவை உட்பட, மீழ் நிகழ்தலை தடுப்பதற்காக மேற்கொள்ளக்கூடிய பயனுள்ள நடவடிக்கைகளை எடுப்பதற்கான வழிகளைச் சுட்டிக்காட்டியுள்ளன. சமூக செயற்பாட்டுத் தளத்தை வலுப்படுத்துதல், கல்வித் திட்டங்கள், பாகுபாடுகளுக்கு-எதிரான முயற்சிகள், நினைவேந்தல், பொதுக்காப்பகங்கள் மற்றும் போதுமான உளவியல் ஆதரவு ஆகியவை உட்பட்ட மேலதிக நடவடிக்கைகளும் தேவைப்படுகின்றன.

### பொறுப்புக்கூறலுக்கான சர்வதேசத்தின் பங்களிப்புகள்

உள்நாட்டு மட்டத்தில் உள்ள பொறுப்புக்கூறலில் காணப்படும் இடைவெளியினைக் கருத்தில் கொண்டு, இலங்கையில் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதில் சர்வதேச சமூகம் ஈடுபடுவதும், மேலும் தீவிரமான பங்களிப்பினை செலுத்துவதும் இன்றியமையாததாகும். உலகளாவிய அதிகார சட்ட வரம்பிற்கு உட்பட்ட நாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாட்டிற்கு அமைய, அவ்வாறான தனிப்பட்ட நாடுகளினால் இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதற்கு பொறுப்பானவர்கள் என குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது விசாரணைகளை தொடரவோ அல்லது வழக்குகளை தொடரவோ முடியும். குறிப்பாக தன்னார்வ தொண்டு நிறுவனங்களால், அத்தகைய நடவடிக்கைகளைத் தூண்டுவதற்கு சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறான செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டைகளாக இருக்கும் பல விடயங்களுக்கு மத்தியில், அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சட்ட விலக்கு பாதுகாப்பும் (immunities) உள்ளடங்கும். சட்ட மீறல்களில் ஈடுபட்டதாக நம்பத்தகுந்த வகையில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக மேலும் இலக்குத் தடைகளை (targeted sanctions) விதிக்குமாறு OHCHR மீண்டும் மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது. இவ்விடயங்களுக்கான தீவிர ஒத்துழைப்பினையும் அத்துடன் இலங்கையின் ஐ.நா விற்க்கான அமைதிகாக்கும் நபர்களாக நியமிக்கப்படுபவர்கள், இருதரப்பு பரிமாற்றங்கள்/பயிற்சிகள் ஆகியவற்றுக்கு அனுப்பப்படக்கூடிய இலங்கை அதிகாரிகரிகள் ஆகியோர் மீது அவர்கள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளனரா என்பதற்கான பரிசோதனை செய்யும் (screening) நடைமுறைகளையம் பிற கட்டுப்பாட்டு நடவடிக்கைகளையும் மிகவும் கடுமையாக பிரயோகிக்க வேண்டும் என்பதனையும் இந்த அறிக்கை ஆதரிக்கின்றது.

## பரிந்துரைகள்

தொடர்ந்து வரும் வலிந்து காணாமலாக்கப்படுதலுக்கான பொறுப்புக்கூறல் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கு இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் இந்த அறிக்கை பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

காணாமலாக்கப்பட்டவர்களின் அளவினையும் மற்றும் காணாமலாக்கப்படலில் பாதுகாப்பு படையினரும் அவர்களுடன் தொடர்புடைய ஆயுத குழுக்களும் ஈடுபட்டுள்ளனர் என்பதனையும் ஏற்றுக் கொள்வதுடன் அதற்கான பொது மன்னிப்பினையும் அரசு கோர வேண்டும் என பரிந்துரைக்கின்றது. வலிந்து காணாமலாக்கப்படல் தொடர்பிலான விசாரணைகளையும் வழக்குகளையும் தொடர்வதற்கு ஏற்ப பயனுள்ள கட்டமைப்பினை உறுதிப்படுத்தவும் மற்றும் சுதந்திரமான விசாரணைகளை தீவிரப்படுத்தவும் அரசியலமைப்பு மற்றும் சட்ட சீர்திருத்தங்களை விரைவுபடுத்துமாறு இலங்கைக்கு அழைப்பு விடுக்கிறது. சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் பாரிய மீறல்கள் மற்றும் மோசமான சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பான பிரச்சனைகளை கையாள்வதற்கு சுயாதீனமான அரச சட்டத்தரணிகளின் அதிகாரம், ஒரு சிறப்பு அரச சட்டத்தரணி மற்றும் ஒரு தற்காலிக சிறப்பு நீதிமன்றம் ஆகியவற்றை உடனடியாக இலங்கை நிறுவ வேண்டும் என இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது. அதிகளவான இதன் பரிந்துரைகள் காணாமல் போனோருக்கான அலுவலகத்தினை (OMP) மேம்படுத்துதல் பாரிய மனிதப்புதைகுழிகள் தொடர்பில் சிறந்த முறையில் விசாரணை மேற்கொள்ளப் படுவதை உறுதிப்படுத்துதல் மற்றும் தொடர்புடைய காப்பகங்கள் மற்றும் CoI அறிக்கைகளிலிருந்து தகவல்களை கிடைக்கச் செய்தல் ஆகியவற்றை நோக்கி முன்வைக்கப்பட்டுள்ளன. எந்தவொரு புதிய உண்மையைத் தேடும் பொறிமுறையேனும் நிறுவப்படுவதற்கு முன், மனித உரிமைகளுக்காக போராடுபவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குழுக்களுக்கு எதிரான சட்டவிரோத மற்றும் தன்னிச்சையான கண்காணிப்பு, அனைத்து வகையான அச்சுறுத்தல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் போன்ற செயல்கள் நிறுத்தப்படுதல் உள்ளிட்ட முக்கியமான நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை இலங்கை முன்னெடுக்க வேண்டும் என்றும் OHCHR பரிந்துரைக்கிறது. எந்தவொரு உண்மையைத் தேடும் பொறிமுறையும் நீதித்துறை பொறிமுறையை உள்ளடக்கிய விரிவான ஒரு நிலை மாறுகால நீதிக்கான மூலோபாயத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். இதேபோல், OHCHR ஒரு விரிவான மற்றும் பால்நிலை-உணர்திறன் கொண்ட அணுகுமுறையை இழப்பீடுகளுக்கு பரிந்துரைக்கிறது.

*நம்பத்தகுந்த வகையில் மீறல்களில் ஈடுபட்டவர்கள் என குற்றஞ் சாட்டப்பட்டவர்களை உயர்மட்ட பதவிகளுக்கு நியமிப்பதை அல்லது ஊக்குவிப்பதை தவிர்ப்பது உட்பட, வலிந்து காணாமலாக்கப்படல் மீண்டும் நிகழாமல் தடுக்க உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கோருகிறது.*

*மனித உரிமைகள் ஆணையகத்தினூடாக இலங்கையின் பொறுப்புக்கூறலை நோக்கிய அபிவிருத்திகள் மற்றும் முன்னேற்றங்கள் தொடர்பான விடையங்களை சர்வதேச சமூகம் தொடர்ந்து உன்னிப்பாக அவதானிப்பதுடன், அதன் இருதரப்பு மற்றும் பலதரப்பு உறவுகள், உலகளாவிய அதிகார சட்ட வரம்பு (universal jurisdiction) மற்றும் சர்வதேச நீதித்துறையில் உள்ள பிற வழிகள் ஆகியவற்றை பயன்படுத்துவதுட்பட இலக்குத் தடைகளை விதித்தல் போன்ற பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த வல்ல அனைத்து வழிகளையும் அது பயன்படுத்த வேண்டுமென OHCHR பரிந்துரைக்கிறது.*

***